செய்தி வெளியீடு எண். 83 நாள். 07.02.2018

# தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் சார்பாக காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி மூலம் சிறுபான்மையினருக்கு கடன் வழங்கும் விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் 7 நபர்களுக்கு ரூ. 3 இலட்சத்தி 45 ஆயிரத்திற்கான கடன் உதவிகளை வழங்கினார்

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், எஸ்.பி. அன்னபூர்ணா திருமண மண்டபத்தில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் சார்பாக காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி மூலம் சிறுபான்மையினருக்கு கடன் வழங்கும் விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் ரூ. 3 இலட்சத்தி 45 ஆயிரத்திற்கான கடன் உதவிகளை இன்று (07.02.2018) வழங்கினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது:

திருவள்ளூர் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் கீழ் 122 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், இரண்டு நகர கூட்டுறவு கடன் சங்கங்கள், ஒரு நகர கூட்டுறவு வங்கி மற்றும் காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கியின் திருவள்ளூர் மாவட்டத்திற்கான 21 கிளைகள் ஆகியன செயல்பட்டு வருகின்றது. இச்சங்கங்கள் மூலம் பொருளாதார அடிப்படையில் பின்தங்கியுள்ள சிறுபான்மையினருக்கு பொருளாதார மேம்பாட்டு கடன்கள் வழங்கப்படுகின்றது. அதாவது, மேற்கண்ட சங்கங்கள் மற்றும் வங்கியுடன் அங்கத்தினர்களாக இஸ்லாமியர்கள், கிருத்துவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தினர், பார்சியர்கள் மற்றும் ஜெயின் பிரிவை சார்ந்த சிறுபான்மையினர்களுக்கு சிறு வணிகம், கல்வி, உற்பத்தி சார்ந்த சிறு தொழில்கள் மேற்கொள்ள குறைந்த வட்டியில் (5%) பொருளாதார மேம்பாட்டு கடன்கள் வழங்கப்படுகிறது. இதற்கான நிதி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் கழகத்திடமிருந்து பெற்று வழங்கப்படுகிறது. டாம்கோ கடன் கோரும் விண்ணப்பத்துடன் முக்கிய ஆவணங்களான இனச் சான்றிதழ் நகல், வருமான சான்றிதழ் நகல், குடும்ப அட்டை நகல், வாக்காளர் அட்டை நகல், ஆதார் அட்டை நகல், தொழில் செய்யவுள்ள திட்ட அறிக்கை, பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம் ஒன்று ஆகியன இணைத்து விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

சிறுபான்மையினருக்கான டாம்கோ கடன் தனிநபருக்கு ரூ.50 ஆயிரமும், குழுக்களுக்கான குழுக்கடன் சுமார் ரூ.5 இலட்சம் முதல் ரூ.6 இலட்சம் வரையிலும் தகுதியின் அடிப்படையில் அனுமதிக்கப்படுகிறது.

. இந்த கடன் மேளாவில் கலந்துகொள்ள வருகை புரிந்துள்ள சிறுபான்மை சமுதாயத்தை சேர்ந்த பொது மக்கள் டாம்கோ கடன் தொடர்பான ஆவணங்களுடன் கடன் மனுக்களை சமர்ப்பித்து பொருளாதார மேம்பாட்டுக் கடன் பெற்று பயன் பெற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

திருநின்றவூரைச் சேர்ந்த 6 நபர்களுக்கு தலா ரூ. 50 ஆயிரத்திற்கான கடன் உதவியும், பென்னாலூர்பேட்டையை சேர்ந்த ஒரு நபருக்கு ரூ.45 ஆயிரத்திற்கான கடன் உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார். பின்பு கடன் வழங்குவதற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு.இ.கிருஷ்ணமூர்த்தி, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் திருமதி.ம.தமிழ்செல்வி, இணைப் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் (காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி) திருமதி.பா.ஜெயஸ்ரீ, திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.ம.நாராயணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**